நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.50/2022

அரசு தரப்புக்காக அ. சா.9 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சக்கரவர்த்தி | தொழில்/ பதவி | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 17 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of June 2026.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.08 )

நான் தற்போது மருதூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வளாராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.09.2021 ஆம் தேதி காலை 9.30 மணி அளவில் நான் பண்ருட்டி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வளராக பணியில் இருந்தபோது ஜெயப்பிரியா த/பெ. சரவணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று பண்ருட்டி காவல் நிலைய குற்ற எண்.959/2021, சட்டப்பிரிவு குவிமுச 174(1)–ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி

முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் மனுவையும் இணைத்து பண்ருட்டி நீதித்துறை நடுவர் எண்.1–க்கு அனுப்பிவைத்தேன். இதர சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். புகார் 15 மணி நேரம் கால தாமதத்துடன் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகாரில் எதிரி செந்தில்குமார் 29.09.2021 மதியம் வீட்டிற்கு வந்த நேரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நேரமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு பண்ருட்டி மருத்துவமனையில் தனது தாயாரை சேர்த்தார் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு தன் தாயார் இறந்துவிட்டார் என்று நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஒரு நபர் இறந்துவிட்டால் சம்மந்தப்பட்ட காவல் துறைக்கு தகவல் தரப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட நபர் இறந்ததை குறித்து மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்ததா என்றால் தற்போது எனக்கு நினைவு இல்லை. புகார் காலதாமதம் குறித்து புகாரில் காரணம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பண்ருட்டி காவல் நிலையமும் பண்ருட்டி நீதிமன்றமும் அருகருகே உள்ள வளாகத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். 30.09.2021 ஆம் தேதி அன்று பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 20.10.2021 தேதி அன்று தான் நீதிமன்றத்தால் பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

30.09.2021 ஆம் தேதி காலை 9.30 மணிக்கு ஜேயப்பிரியா என்பவர் பண்ருட்டி காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றும் என்னிடம் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் அந்த தேதியில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.21)

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.